## கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை
## கல்விப்பீடம்

### கல்விமாணி கற்கைநெறி – பகுதி III

### SC 408 பாடசாலை உளவளத்துணை

### முதலாம் பருவம் - ஜூலை 2020

**நேரம்: 3 மணித்தியாலங்கள்**

---

**பகுதி I உள்ள சகல வினாக்களுக்கும் பகுதி IIல் விரும்பிய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.**

### பகுதி I

1. வழிகாட்டல் மற்றும் உளவளத்துணை என்ற பதங்களை வேறுபடுத்துக.
2. பார்சனின் வழிகாட்டல் மாதிரியினை சுருக்கமாக விளக்குக.
3. பரீட்சை பீதி என்றால் என்ன?
4. ஜோசப் வால்டரின் (wolte) கருத்தின்படி பொருத்தப்படற்ற நடத்தை எவ்விதம் இடம்பெறுகின்றது என்பதை உதாரணத்துடன் தருக.
5. பாடசாலை உளவளத்துணையாளர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய ஆளுமைப் பண்புகள் நான்கினைத் தருக.
6. கின்ஸ்பர்க்கின் தொழில் வழிகாட்டல் கொள்கையின்படி கற்பனைப்பருவம் (Fantacy) என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.
7. நிபந்தனையற்ற ஆதரவு (Unconditional positive regard) என்றால் என்ன?
8. உளவளத்துணை செயன்முறையின் போது பயன்படுத்தப்படும் வினாக் கேட்டல் நுட்பங்கள் இரண்டினை உதாரணங்களுடன் தருக.
9. பாடசாலையில் உளவளத்துணை நிலையத்தை ஆரம்பிக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பௌதீக அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. பொழிப்புக்கூறுதல் (Pharapharizing) என்றால் என்ன?

(2 x 10 = 20 புள்ளிகள்)

## பகுதி II

1.

I. உளவளத்துணை என்றால் என்ன என்பதை வரையறை செய்து உளவளத்துணை மற்றும் புத்தமதி கூறுதல் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

II. இலங்கையின் உளவளத்துணைச் சேவை விருத்தியினை சுருக்கமாக விளக்கி இலங்கையில் பாடசாலை உளவளத்துணைச் சேவையின் அவசியத்தை கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

2.

I. உளவளத்துணையின் முக்கிய துறைகளைப் பெயரிட்டு அவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

II. உளவளத்துணையாளர் என்ற வகையில் கடைபிடிக்கப்பட வேண்டிய பொதுவான ஒழுக்க நடத்தைகள் நான்கினைச் சுருக்கமாக கூறி அவற்றை பாடசாலை உளவளத்துணைச் சேவையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என விளக்குக.

(10 புள்ளிகள்)

3.

I. மாணவர் ஒருவர் பிரச்சினைக்குள்ளாகும் விதத்தினை ஏதாவது ஒரு உளவளத்துணை அணுகுமுறையின் அடிப்படையில் உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

II. மொரில், ஒட்டிங் மற்றும் ஹர்ஸ்ட் (Morril, Oetting and Hurst) ஆகியோரின் உளவளத்துணையின் வேறுபட்ட பரிமாணங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

4.

I. மாணவர்களின் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சோதனை அல்லாத நுட்ப முறைகள் நான்கினைக் பெயரிட்டடு விளக்குக.

(10 புள்ளிகள்)

II. பாடசாலை உளவளச் சேவை நிலயத்தில் மாணவர்களின் தகவல்களை முறைமை அடிப்படையில் பேணப்பட வேண்டியதன் அவசியம் பற்றி கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

5.

II. கவனித்தல் திறன்களைப் (Attending skills) முன்வைத்து பாடசாலை உளவளத்துணையாளர் என்ற வகையில் மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ள கவனித்தல் திறன்களை எவ்விதம் பயன்படுத்தலாம் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

II. நீங்கள் கற்ற தொழில் வழிகாட்டல் கொள்கைகளை மாணவர்களின் தொழில் தெரிவு சார் பிரச்சினைகளின் போது எவ்விதம் பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

6.

I. ஒத்துணர்வுத் துலங்கல் (Empathy) என்றால் என்ன? அதன் பண்புகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

II. பாடசாலை உளவளத்துணையாளர் என்ற வகையில் மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஒத்துணர்வுத் துலங்கலை எவ்விதம் பயன்படுத்தலாம் என்பதை உதாரணங்களுடன் முன்வைக்குக.

(10 புள்ளிகள்)